# இடைப்பாடி நகராட்சி

## 08.05.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

சேலம் மாவட்ட அரசிதழ் சிறப்பு வெளியிடு 16.06.2017 எண் 18ன் படி இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான ஏரிகளின் விவரங்கள் பின்வருமாறு

| வ.எண் | கிராமம் | ஏரி /குளம்/ குட்டை/ கண்மாய் பெயர் | புலஎண் | மொத்த விஸ்தீரணம் | கட்டுப்பாட்டில் உள்ள துறை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 (ஹெக்டேரில்) | 6 |
| 1 | எடப்பாடி | ஆலச்சம்பாளையம் சின்னஏரி | 131 | 12.85.0 | நகராட்சி |
| 2 | ஆவணிப்பேரூர் மேற்கு | அச்சம்பட்டி ஏரி | 28 | 21.35.0 | நகராட்சி |
| 3 | ஆவணிப்பேரூர் மேற்கு | கொத்தப்பாளையம் சின்னஏரி | 78 | 12.83.0 | நகராட்சி |

மேற்கண்ட மூன்று ஏரிகளையும் தலைமை பொறியாளர்(பொது) பொதுப்பணித்துறை சென்னை அவர்களின் கடிதம் எண் S7(3)48386- Mettur Sarabanga /OT-II/2019 Dated 21.04.2020 ன்படி மேட்டூர் அணையில் உபரியாக வரும் வெள்ள நீரினை சேலம் மாவட்டத்தில் உள்ள சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நிரப்பி விவசாயத்திற்கு பயன்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு இத்திட்டத்தில் வரும் அனைத்து ஏரிகளும் பொதுப்பணி துறையின் கட்டுப்பாட்டில் வரப்பெறவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள மேற்கண்ட 3 ஏரிகளையும் பொதுப்பணித்துறைக்கு ஒப்படைப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இடைப்பாடி கிராமம், இடைப்பாடி சின்ன ஏரி (ஆலச்சம்பாளையம் சின்ன ஏரி) , ஆவணிப்பேரூர் மேற்கு கிராமம் அச்சம்பட்டி ஏரி மற்றும் ஆவணிப்பேரூர் மேற்கு கிராமம், ஆவணிப்பேரூர் சின்ன ஏரி(கொத்தாபாளையம் ஏரி) ஆகிய 3 ஏரிகளையும் இனி வரும் காலங்களில் பொதுப்பணி துறையின் மூலம் செயல்படுத்தப்படும் மேட்டூர் அணை வெள்ள உபரி நீரேற்றும் திட்டத்தின் மூலம் நீரேற்றம் செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு பொதுப்பணித்துறைக்கு நிரந்தரமாக ஒப்படைப்பு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி

# இடைப்பாடி நகராட்சி
## 29.05.2020ம் தேதிய நடைபெற்ற நகர்மன்ற கூட்ட நடவடிக்கைகளின் விபரம்

பொருள் 1

இடைப்பாடி நகராட்சி பொது சுகதாரப்பிரிவு, நகராட்சி பகுதிகளில் கொரோனா வைரஸ் நோய் பரவாமல் தடுப்பு பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண் 3336/J2/2020, நாள் 24.03.2020 ல் ரூ3.50 இலட்சம் ந.க.எண் 3336/J2/2020 நாள் 09.04.2020 ல் ரூ19.00 இலட்சம் மொத்தம் ரூ.22.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கடிதங்கள் மன்றத்தின்பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலககுறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் 2

இடைப்பாடி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரனா வைரஸ் பொது மக்களிடையே பரவுவதையே தவிர்க்கும் பொருட்டும் நகரில் பொது சுகாதாரத்தை மேம்படுத்தவும் கீழ்கண்ட உபகரணங்கள் அவசர அவசியமாக கொள்முதல் செய்ய இந்நகராட்சி ஒப்பந்ததாரரிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் 04.05.2020ல் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

**<u>பொருட்களின் விபரம்</u>**

| வ.எண் | பொருட்களின் விவரம் | எண்ணிக்கை | பி.மணி தரணி ஸ்ரீ, ஒப்பந்ததாரர் | ஆர்.சத்தியநாதன், ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 1 | முழு உடல் உறை (PPE KIT) | 1 எண்ணிக்கை | ரூ550.00 | ரூ600.00 |
| 2 | முகவுரை (Cottonmask) | 1 எண்ணிக்கை | ரூ15.00 | ரூ20.00 |
| 3 | கையுரை ( Cotton Gloves) | 1 எண்ணிகை | ரூ15.00 | ரூ20.00 |

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் ஒப்பந்ததாரர் திரு.பி.மணி என்பவரது விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்று திரு.பி.மணி , தரணிஸ்ரீ ஒப்பந்ததாரர் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு.பி.மணி, தரணிஸ்ரீ ஒப்பந்ததாரர் அவர்களுக்கு அவசர அவசியம் கருதி தனி முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண் 450/2020/எச்1)

பொருள் 3

இந்நகராட்சியில் மின்கம்பி உதவியாளராக பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக 31.05.2020 பணி ஓய்வு பெறும் திரு.நா.அன்பழகன் அவர்களுக்கு அரசாணை எண்.136 நிதித்துறை நாள் 29.02.1984ல் தெரிவித்துள்ளவாறு ( SPF) சிறப்பு வருங்கால வைப்புநிதி திட்டத்தின் கீழ் அரசு பங்குத்தொகை ரூ10000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்1112/2016/பி3)

பொருள் 4

நகராட்சிக்கு அக மற்றும் புற பணியாளர்களுக்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் எழுது பொருட்கள் மற்றும் விலை மதிப்பு படிவங்கள் அச்சு ரசீதுகள் மற்றும் அச்சு செய்த படிவங்கள் ஆகியவைகளை 2020 – 2021 ம் ஆண்டிற்கு வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ15.00ந்து லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்787/2020/டி2)

பொருள் 5

இடைப்பாடி நகரட்சி பொதுசுகதாரப்பிரிவு JCB வாகனம் எண் TN52E2066 ன் ஆயில் சீல், ஒயரிங் செட் Hydraulic Oil மற்றும் பழுதடைந்த உதிரி பாகங்கள் மாற்றி சர்வீஸ் செய்ய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/S சூர்யபாலா இயர்த் மூவர்ய் சேலம் அவர்களின் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ60000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) மேற்கண்ட செலவு தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) மேற்படி பணியின் அத்தியாவசிய அவசர அவசியம் கருதி தனி அலுலவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
   (ந.க.எண்2067/2019/எச்1)

பொருள் 6

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 4980/2018/ஜே3, நாள் 11.04.2019 ல் இந்நகராட்சியில் 20 ஆண்டுகளுக்கு மேல் மாசற்ற முறையில் விபத்துகள் இன்றி பணிபுரிந்து வரும் ஓட்டுநர்கள் திரு.பி.சுப்பிரமணி மற்றும் திரு.கே.பெரியசாமி ஆகியோருக்கு தங்க பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கிட உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்காணும் ஓட்டுநர்களுக்கு தங்க பதக்கம் மற்றும் நற்சான்று வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.80000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 8079/2018/சி1)

பொருள் 7

இந்நகராட்சியின் கீழ் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் உணவு உண்ண வருபவர்களுக்கு உணவுக்காக வழங்கப்பட்டு வரும் டோக்கன் மிகவும் குறைவாக உள்ளதால், பொதுமக்கள் நலன் கருதி தேவையான அளவு உள்ளூர் அச்சகத்தில் விலைப்புள்ளி பெற்று அச்சடித்து கொள்ளவும், அம்மா உணவகத்தில் சாப்பிடக்கூடிய தட்டுகளின் அளவு குறைவாக உள்ளதால் 50 எண்ணிக்கை கொண்ட தட்டுகள் உள்ளூர் கடைகளில் கொள்முதல் செய்து கொள்ளவும், மேலும் 2020–21 ஆம் ஆண்டிற்கு அம்மா உணவகத்தில் அவசரத்திற்கு தேவையான சில்லரை செலவினங்களை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகையாக ரூ.300000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2494/2014/சி1)

பொருள் 8

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14, வாரச்சந்தையில் MCC சென்டரில் உள்ள 5 எச்.பி ஏர்கம்பரசர் மோட்டார் பழுதடைந்துள்ளதை புதிய உதிரிப் பொருட்களை கொண்டு சரி செய்து இயக்கி காட்டும் பணிக்கு லேபர் சார்ஜ் உட்பட ஆகும் செலவு குறித்து விலைப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எ.ண் 0534/2020/இ1 நாள் 09.04.2020ல் கோரப்பட்டதை 20.04.2020ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்,

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி நிர்ணயம் செய்த தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | M/S **முகுந்தன் பவர் சிஸ்டம்ஸ்**, பூலாம்பட்டி. | ரூ.10,930/- |
| 2 | M/S எ.கே பவர் பாய்ண்ட் , இடைப்பாடி. | ரூ.11,609/- |
| 3 | M/S எ.கே.எம் இன்ஜினியரிங ஒர்க்ஸ், இடைப்பாடி. | ரூ.12,070/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் : 1 ல் கண்ட M/S **முகுந்தன் பவர் சிஸ்டம்ஸ்**, பூலாம்பட்டி என்பவரது விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மன்ற முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் பணிக்கான செலவினத்தை தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0534/2020/இ1)

பொருள் 9

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14, வாரச்சந்தை பகுதியில் புதியதாக துாய்மைப் பணியாளர் குடியிருப்பில் உள்ள மோட்டார் பழுதடைந்துள்ளதை புதிய உதிரிப் பொருட்களை கொண்டு சரி செய்து இயக்கி காட்டும் பணிக்கு லேபர் சார்ஜ் உட்பட ஆகும் செலவு குறித்து விலைப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எ.ண் 0533/2020/இ1 நாள் 15.04.2020 ல் கோரப்பட்டதை 30.04.2020 ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்,

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி நிர்ணயம் செய்த தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | M/S **முகுந்தன் பவர் சிஸ்டம்ஸ்**, பூலாம்பட்டி. | ரூ.1850/- |
| 2 | M/S எ.கே பவர் பாய்ண்ட் , இடைப்பாடி. | ரூ.1980/- |
| 3 | M/S எ.கே.எம் இன்ஜினியரிங ஒர்க்ஸ், இடைப்பாடி. | ரூ.2100/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் : 1 ல் கண்ட M/S **முகுந்தன் பவர் சிஸ்டம்ஸ்**, பூலாம்பட்டி என்பவரது விலைப்புள்ளி மற்ற இரண்டு விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மன்ற முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும் பணிக்கான செலவினத்தை தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 0533/2020/இ1)

பொருள் 10

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் IGFF திட்டம் மூலம் கட்டப்பட்டு காலியாக உள்ள கடை எண் 1,2 ஆகிய இரு கடைகளுக்கு 14.05.2020ந் தேதி ஏலம் கோர எவரும் முன்வராத நிலையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ) வாரச்சந்தை IGFF கடை எண் 1–க்கான ஒப்பந்தப்புள்ளி

| வ.எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருபவர்கள் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | உச்ச ஏலக்கேள்வி | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.ஆர்.மகேஸ்வரி, க/பெ.ராஜேந்திரன், 49, காட்டுவளவு, எடப்பாடி | வாரச்சந்தை IGFF கடை எண் –1 | – | 3200 |
| 2 | திருமதி.எம்.தமிழ்ச்செல்வி, த/பெ.மாயவன், 46, பவானிரோடு, எடப்பாடி | | – | 3600 |

ஆ) வாரச்சந்தை IGFF கடை எண் 2–க்கான ஒப்பந்தப்புள்ளி

| வ.எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருபவர்க.ன் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | உச்ச ஏலக்கேள்வி | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.ஆர்.மகேஸ்வரி, க/பெ.ராஜேந்திரன், 49, காட்டுவளவு, எடப்பாடி | வாரச்சந்தை IGFF கடை எண் –2 | – | 3300 |
| 2 | திருமதி.எம்.தமிழ்ச்செல்வி, த/பெ.மாயவன், 46, பவானிரோடு, எடப்பாடி | | – | 3650 |

அலுவலககுறிப்பு

1. வாரச்சந்தை IGFF கடை எண் 1 க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக

உள்ளது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் தலைமையிலான கண்காணிப்புகுழு நிர்ணயம் செய்த வாடகை ரூ3500/—யை விட கூடுதலாக கோரியுள்ளதால் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம்.

2. வாரச்சந்தை IGFF திட்ட கடை எண் 2 க்கு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி கேள்வியானது மற்ற ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக உள்ளது. மேலும் இக்கடைக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் —9 அவர்களின் தலைமையிலான கண்காணிப்புகுழு நிர்ணயம் செய்த வாடகை ரூ3500/—யை விட கூடுதலாக கோரியுள்ளதால் உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்423/2019/பி4)

பொருள் 11

இந்நகராட்சிக்கு சொந்தமான வெள்ளாண்டிவலசு தினசரி நாளங்காடி கடை எண் 9—க்கு இவ்வலுவலக ந.க.எண் 1014/2019/பி4, நாள் 08.05.2020ந் தேதிய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையின் வாயிலாக கோரப்பட்டதற்கு 14.05.2020 ந் தேதி ஏலம் கோர எவரும் முன்வாரத நிலையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதன் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருபவர்க.ன் பெயர் மற்றும் முகவரி | கடையின் விபரம் | உச்ச ஏலக்கேள்வி | உச்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.அம்மாசி த/பெ.பெருமாள், 104/8, பழைய எடப்பாடி, எடப்பாடி | தினசரி நாளங்காடி, கடை எண் —9 | — | 900 |
| 2 | திரு.சி.சேவி த/பெ.சின்னபையன் 2/110, வெள்ளைய கவுண்டனூர் காடு, சித்தூர், எடப்பாடி | | — | 1250 |

அலுவலககுறிப்பு

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வெள்ளாண்டிவலசு தினசரி நாளங்காடி கடை எண் 9க்கு வரிசை எண் 2ல் கொடுத்துள்ள திரு.சி.சேவி த/பெ.சின்னபையன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வியைவிட அதிகமாக உள்ளது. எனவே இவ்ஒப்பந்தப்புள்ளி கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
(ந.க.எண் 1014/2019/பி4)

பொருள் 12

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30, ஆவணியூர் பச்சியப்பன் காலனி பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் இல்லாததால் புதியதாக பகிர்மான குழாய் 5" இன்ச் பிசிவி 200 மீ மற்றும் வார்டு எண் 27 சங்ககிரி மெயின்ரோடு மேடான பகுதிகளிலும் சீரான குடிநீர் விநியோகம் இல்லாததால் 3" பிவிசி, மற்றும் சுமார் 850 மீட்டர் பைப்புகள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் பொது மக்கள் அத்தியாவசிய நலன் கருதி மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது மக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணிமேற்கொள்ளவும், பணிக்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 537/2020/இ1)

பொருள் 13

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் டெங்கு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள தேவையான மலேரியா பணியாளர்கள் இல்லாததால், வெளிக்கொணர்வு (Out sourcng) மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களிடம், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அவ்வப்போது அரசிதழில் வெளியிடப்படும் தினக்கூலி அடிப்படையில் 30 பணியாளர்களை விநியோகம் செய்ய வாகை மற்றும் பூங்குழல் மகளிர் சுய உதவிக்குழுகளின் பணிகாலம் 31.05.2020 உடன் முடிவடையவுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று வேகமாக பரவி வருவதால் ஊரடங்கு உத்திரவு நடைமுறையில்

உள்ளதால் 2020–2021 ஆம் ஆண்டுக்கு புதியதாக விலைப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளது. பொது சுகாதார டெங்கு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் நிலை என்பதால் 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்க்கு மேற்படி மகளிர் சுயஉதவிக்குழுவின் சம்மதக்கடிதத்துடன் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும், மேற்படி இப்பணிகளுக்கு ஏற்படும் இதர கூடுதல் செலவினங்களும் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ10,00,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்ற அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் வாகை மற்றும் பூங்குழல் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும், மூன்று மாதகாலத்திற்க்கு பணி நீட்டிப்பு உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
3) மேற்படி செலவினம் பொதுநிதியில் இருந்து வழங்கலாம்.
(ந.க.எண் 554/2019/எச்1)

பொருள் 14

இடைப்பாடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நகரில் குப்பைகள் அகற்றும் பணிக்கு (Out sourcing) மூலம் Outsourcing மூலம் 70 தூய்மை பணியாளர்களை விநியோகம் செய்ய ரிலையான் பெசிலிட்டிஸ், சென்னை நிறுவனம் அவர்களின் பணிகாலம் 31.05.2020 உடன் முடிவடையவுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று வேகமாக பரவி வருவதால் ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் உள்ளதால் 2020–2021 ஆம் ஆண்டுக்கு புதியதாக ஒப்பந்தபுள்ளி கோர இயலாத நிலை உள்ளதாலும், பொது சுகாதார டெங்கு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் நோய் தொற்று தடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் நிலை என்பதால் 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்க்கு பணிகள் மேற்கொள்ள M/S ரிலையான் பெசிலிட்டி சர்வீஸ் (P) லிட், சென்னை அவர்களின் சம்மத கடிதத்துடன் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும், மேற்படி இப்பணிகளுக்கு ஏற்படும் இதர கூடுதல் செலவினங்களும் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ30,00,000/– க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்ற அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர மன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்க்கு திடக்கழிவு மேலாண்மை பணிகளை செய்து வரும் ரிலையான் பெசிலிட்டிஸ், சென்னை அவர்களின் பணி காலத்தை நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

( ந.க.எண் 558 / 2019 / எச்1 )

பொருள் 15

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் JCB இயந்திர எண் TN52E 2066 (Excavator Loader) வாகனத்திற்கு ஓட்டுநர் விநியோகம் செய்ய இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.மா.கோபால் என்பவருக்கு வழங்கப்பட்ட பணி உத்திரவு காலம் 31.05.2020 உடன் முடிவடையவுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று வேகமாக பரவி வருவதால் ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் உள்ளதால் 2020–2021 ஆம் ஆண்டுக்கு புதியதாக விலைப்புள்ளி கோர இயலாத நிலை உள்ளதாலும், பொது சுகாதார டெங்கு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் நிலை என்பதால் 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்க்கு இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.மா.கோபால்அவர்களின் சம்மத கடிதத்துடன் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும், மேற்படி இப்பணிகளுக்கு ஏற்படும் இதர கூடுதல் செலவினங்களும் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ75000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்ற அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகரமன்ற தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் ஒப்பந்ததாரர் திரு.மா.கோபால்

அவர்களுக்கு 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்கு பணிநீட்டிப்பு உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

3. மேற்படி செலவினம் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.

(ந.க.எண் 550/2017/எச்1)

பொருள் 16

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாழுதல் விதியின்கீழ் இடைப்பாடி நகராட்சியில் சேகரம் ஆகும் குப்பைகளை தரம் பிரித்து நுண்உயிர் உரம் தயாரிக்க 5 எண்ணிக்கை நுண் உயிர் மையங்களில் பணிபுரிய 30 பணியாளர்களை விநியோகம் செய்ய ரோஜா மற்றும் தாமரை மகளிர் சுய உதவிக்குழுகளின் பணிகாலம் 31.05.2020 உடன் முடிவடையவுள்ளது. தற்போது கொரோனா வைரஸ் நோய் தொற்று வேகமாக பரவிவருவதால் ஊரடங்கு உத்திரவு நடைமுறையில் உள்ளதால் 2020—2021 ஆம் ஆண்டுக்கு புதியதாக விலைப்புள்ளி கோர இயலாத நிலை உள்ள பொது சுகாதார டெங்கு ஒழிப்பு பணி மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்படும் நிலை என்பதால் 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்க்கு மேற்படி மகளிர் சுயஉதவிக்குழுவின் சம்மதக்கடிதத்துடன் ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும், மேற்படி இப்பணிகளுக்கு ஏற்படும் இதர கூடுதல் செலவினங்களும் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ10,00,000/— க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1) மன்ற அனுமதிக்கலாம்.
2) பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகரமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே வழங்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் ரோஜா மற்றும் தாமரை மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு 01.06.2020 முதல் 31.08.2020 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்க்கு பணிநீட்டிப்பு உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அங்கீகாரம் வழங்கலாம்.
3) மேற்படி பணிக்கு ஏற்படும் செலவினத்திற்கு பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண் 54/2019/எச்1)

பொருள் 17

இடைப்பாடி நகராட்சியில் பணிபுரிந்த மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி சந்தா தொகைக்கு வட்டி கணக்கிடாமல் 1986—87ம் ஆண்டு முதல் 2016—2017ம் தணிக்கை ஆண்டு முடிய நிலுவையாக உள்ளதாகவும் அதற்கான பிரேரணைகளை தாமதமின்றி தயாரித்து அனுப்பி வைக்க உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, சேலம் அவர்களின் ப.வெ.எண்.11/அ1/2017 நாள் 13.06.2017ம் தேதிய கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள். மேற்படி பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேமநலநிதி சந்தா தொகைக்கு வட்டித்தொகை கணக்கிடும் பணி நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதாலும் அதனை தனியார் நிறுவனம் மூலம் 1986—1987ம் ஆண்டு முதல் 2018—2019ம் ஆண்டு முடிய வட்டி கணக்கிடும் பணிசெய்து பிரேரணைகள் தயார் செய்ய (Date Processing for Individual & Abstract Details) பணிக்கு விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றது

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1) | Sanjey Solutions, 14 H AVR line, Komarapalayam | Rs.1,98,000/- |
| 2) | Ozone Technologies, 15, Lake View Road, Kottur, Chennai 600 085. | Rs.2,79,900/- |
| 3) | Ram Solutions, 55 Kamaraj Nagar Thiurvanmmiyur, Chennai 600 041 | Rs.2,14,500/- |

மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வ.எண்.1 Sanjey Solutions, 14 H- AVR line, Komarapalayam அவர்களின் விலைப்புள்ளிமற்ற இரண்டு விலைப்புள்ளியைவிட குறைவாக உள்ளதால் மேற்கண்ட நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்கண்ட நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1504/2017/பி3)

பொருள் 18

தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை குறித்து விளம்பரம் 10x10 என்ற அளவில் பேனர் பிரின்டிங் செய்து இடைப்பாடி நகராட்சி அலுவலகத்தில் வைக்கும் பணியை மேற்கொண்டமைக்கு M/s.Oviya Printers & Designers, தாரமங்கலம் நிறுவனத்தின் பட்டியலில் படி தொகை ரூ.7,500/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட செலவு தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கண்ட பணியின் அவசியம் அவசரம் கருதி நகர்மன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று தொகை ரூ.7,500/–யை M/s.Oviya Printers & Designers, தாரமங்கலம் நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 440 /2020/இ2)

பொருள் 19

இந்நகராட்சி கணினி உதவி திட்ட அமைப்பாளர் அவர்களின் குறிப்பில், நகராட்சி அலுவலகத்தில் கணிணி அறையில் உள்ள ஜெராக்ஸ் இயந்திரம் பழுதடைந்துவிட்டதால் அலுவலக பயன்பாட்டின் அவசர அவசியம் கருதி M/s.ABC Copiers PVT Ltd, Erodeஅவர்கள் மூலம் பணியை மேற்கொண்டமைக்கு செலவு தொகை ரூ.15,200/–யை என்னால் வழங்கப்பட்டது எனவும், மேற்காணும் தொகையை எனக்கு வழங்குமாறு கோரியுள்ளார்.

எனவே, மேற்கண்ட பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்கொண்டமைக்கும், செலவு தொகை ரூ.15,200/–யை இந்நகராட்சி உதவி கணினி திட்ட அமைப்பாளர், திரு. A.செல்வராஜ், அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3435/2019/இ2)

பொருள் 20

இடைப்பாடி நகராட்சிக்கு சொந்தமான பூலாம்பட்டி தலைமை குடிநீர் நிலையத்தில் பழைய குடிநீர் திட்டத்தில் உள்ள சுத்திகரிக்கப்படாத நீரேற்று நிலையத்தில் உள்ள யூனிட் -I 12.5 HP மின் மோட்டாரில் உண்டான ஸ்டார்ட்ரில் உள்ள பழுதுகளை உதிரி பாகஙகள் வாங்கவும் மின்மோட்டாரில் ஏற்பட்டள்ள பழுதுகளை நிவர்த்தி செய்யும் பணிக்கு விலைப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எ.ண் 0532/2020/இ1, நாள் 15.04.2020ல் கோரப்பட்டதை தொடர்ந்து 23.04.2020 ல் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்,

| வ.எண் | விலைப்புள்ளிதாரரின்<br>பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி நிர்ணயம்<br>செய்த தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | M./S எம்.வெஙடாசலபதி, இன்ஜினியரிங, இடைப்பாடி | ரூ.102166 |
| 2 | P. மணி, காண்ட்ராக்டர் (M./S தாரணி ஸ்ரீ இன்ஜினியரிங), இடைப்பாடி | ரூ.99921 |
| 3 | M./S ப.ச்சமுத்து, டிரேடிங காரப்பரேசன், இடைப்பாடி | ரூ.102833 |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் : 2 ல் கண்ட P. மணி, காண்ட்ராக்டர் (M./S தாரணி ஸ்ரீ இன்ஜினியரிங), இடைப்பாடி, என்பவரது விலைப்புள்ளி மற்ற விலைப்புள்ளியை விட குறைவாக உள்ளதால் மேற்காணும் P. மணி, காண்ட்ராக்டர் (M./S தாரணி ஸ்ரீ இன்ஜினியரிங), இடைப்பாடி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது மக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், பணிக்கான செலவினைத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்..

(ந.க.எண் 0532/2020/இ1)

பொருள் 21

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 30 ஆவணியூர் பச்சியப்பன் காலனி பகுதிகளில் சீரான குடிநிர் விநியோகம் இல்லாததால் புதியதாக பகிர்மான குழாய் 5" இன்சு பிவிசி சுமார் மீ மற்றும் வார்டு எண் 27 சங்ககிரி மெயின்ரோடு மேடான பகுதிகளில் சிரான குடிநீர் விநியோகம் இல்லாததால் 3" பிவிசி மற்றும் சுமார் 850 மீட்டர் பைப்புகள் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளியானது இவ்வலுவலக ந.க.எ.ண் 0537/2020/இ1, நாள் 04.02.2020ல் கோரப்பட்டதை தொடர்ந்து 19.02.2020 ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும்,

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | மதிப்பீட்டு தொகை | விலைப்புள்ளி நிர்ணய்ம் செய்த தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1 | திரு.எ.செங்கோட்டையன், ஒப்பந்ததாரர், இடைப்பாடி | ரூ5.00 இலட்சம் | 6.08% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | திரு.பி.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர், இடைப்பாடி | | 4.98% மதிப்பீட்டைவிட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் : 2 ல் கண்ட திரு.பி.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர், இடைப்பாடி என்பவரது ஒப்பந்தப்புள்ளி திரு.எ.செஙகோட்டையன், ஒப்பந்ததாரர், இடைப்பாடி என்பவரது ஒப்பந்தப்புள்ளியைவிட குறைவாக உள்ளதால் மேற்காணும் திரு.பி.சுப்பிரமணி, ஒப்பந்ததாரர், இடைப்பாடி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.

அலுவலககுறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பொது மக்கள் நலன் கருதி மேற்காணும் பணியை மன்ற முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொளவும், பணிக்கான செலவினைத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்..

(ந.க.எண் 0537/2020/இ1)

பொருள் 22

இந்நகராட்சிக்கு சொந்தமான பலவகைப்பட்ட குத்தகை இனங்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைவரி ஆகியவைகளை 2020 – 2021 ம் ஆண்டுக்கு வரி ஆலோசகர் மூலம் வருடாந்திர சரக்கு மற்றும் சேவை மத்திய , மாநில அரசுகளுக்கு தாக்கல் செய்யவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ50000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு – அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 838/2020/பி4)

பொருள் 23

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வந்த ஈப்பு வாகனம் எண்.TN30Y7814 பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதினாலும், நிர்ணயித்த இலக்கின் குறியீட்டினைவிட அதிக தூரம் ஓடி வண்டியினை பயன்படுத்தப்பட்ட இயலாத நிலையில் உள்ள வாகனத்தை மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, வேளச்சேரி, சென்னை அவர்களின் கடிதம் மூ.மு.செ.மு.ஆ.எண்.H1/01135/2020, நாள்.03.02.2020ன் படி கழிவு செய்ய அனுமதிக்கப்பட்டு, மேற்படி வாகனத்தினை இவ்வாகனத்தை விற்பனை செய்யப்பட்டால் எதிர்பார்க்கப்படும் தொகையாக ரூ.73,500/– என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் படி, 29.05.2020 அன்று நடைபெற்ற மூன்றாவது பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததப்புள்ளி கோரியவர்கள் விபரம் | கழிவு சான்றின் படி எதிர்பார்க்கப்படும் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. ஆர்.கதிர்வேல்,<br>69/F, நைனாம்பட்டி ரோட்டுத் தெரு,<br>இடைப்பாடி | ரூ.73,500/– | ரூ.74,500/– |
| 2. | திரு. எம்.ராஜு,<br>த/பெ. முனியக்கவுண்டர்,<br>12/280, காமராஜ் நகர்,<br>போடிநாயக்கன்பட்டி (PO),<br>இடைப்பாடி. | | ரூ.72,750/– |

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) ஒப்புநோக்கு பட்டியலின் படி இவ்வாகனத்தை விற்பனை செய்யப்பட்டால் எதிர்பார்க்கப்படும் தொகைக்கு கூடுதலாக ரூ.74,500/–க்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. ஆர்.கதிர்வேல், 69/F, நைனாம்பட்டி ரோட்டுத் தெரு, இடைப்பாடி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண்.2299/2019/இ2)

பொருள் 24

இடைப்பாடி நகராட்சி 2020–2021ம் ஆண்டு கல்விநிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 22.05.2020ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.30, சின்னேரி நகராட்சி ஆரம்பப் பள்ளி வளாகத்திற்கு தடுப்பு சுவர் அமைக்கும் பணி. | 9.90 | P. சுப்ரமணி,<br>இடைப்பாடி | மதிப்பீட்டை விட 4.95 சதவீதம் அதிகம் |
| | | | M.கோபால்,<br>இடைப்பாடி | மதிப்பீட்டை விட 5.84 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.90 சதவீதம் அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள P.சுப்ரமணி, இடைப்பாடி. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.298/2020/இ2)

பொருள் 25

இடைப்பாடி நகராட்சி 2020–2021ம் ஆண்டு கல்விநிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 22.05.2020ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.15, நகராட்சி தொடக்கபள்ளியில் (பார்க் பள்ளி) டைல்ஸ், பெயின்டிங் மற்றும் பராமரிப்பு பணிகள். | 9.90 | M.கோபால்,<br>இடைப்பாடி | மதிப்பீட்டை விட 4.90 சதவீதம் அதிகம் |
| | | | R. சத்தியநாதன்,<br>இடைப்பாடி | மதிப்பீட்டை விட 6.57 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.90 சதவீதம் அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M.கோபால், இடைப்பாடி. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.160/2020/இ2)

பொருள் 26

இடைப்பாடி நகராட்சி 2020–2021ம் ஆண்டு கல்விநிதியில் கீழ்கண்ட பணியை மேற்கொள்ள 22.05.2020ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண்.7, ஆலச்சம்பாளையம் காட்டூர் நகராட்சி துவக்கப்பள்ளிக்கு தடுப்புசுவர் அமைத்தல் மற்றும் பராமரிப்பு பணிகள். | 9.90 | R. சத்தியநாதன், இடைப்பாடி | மதிப்பீட்டை விட 4.92 சதவீதம் அதிகம் |
| | | | M.கோபால், இடைப்பாடி | மதிப்பீட்டை விட 6.65 சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு.

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில குறைவான மதிப்பீட்டை விட 4.92 சதவீதம் அதிகம் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள R.சத்தியநாதன், இடைப்பாடி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.298/2020/இ2)

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,
இடைப்பாடி நகராட்சி.